**தலைப்பு 287 – காணி நிர்ணயத் திணைக்களம்**

---------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 287 – காணி நிர்ணயத் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் காணி நிர்ணயத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 13 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்ப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### 1.6.1.1 நிதியற்ற சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 யூன் 27 ஆந் திகதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் ஆணையாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ இல்லத்தின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 23,415,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் 2023 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் அக்கட்டிடத்தின் பெறுமதி ரூபா 36,400,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் நிதியற்ற சொத்துக்களின் பெறுமதி ரூபா 12,985,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டதன் பின்னர் காணி நிர்ணயத் திணைக்கத்தின் ஆணையாளர் நாயகத்தின் இல்லம் அரசாங்க மதிப்பீட்டு திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்பட்டு நிதியற்ற சொத்துக்களின் பெறுமதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தின் இணையதள பக்கத்தில் காணி தகவல் முறைமையானது (E-Title System) 2020 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டு அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,900,000 கிரயம் நிதியற்ற சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்காமையின் காரணமாக அப்பெறுமதியால் 2023 ஆம் ஆண்டிற்கான நிதியற்ற சொத்துக்களின் பெறுமதி குறைவடைந்திருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டதன் பின்னர் E-Title முறைமையை ஸ்தாபிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட கிரயத்தினை நிதியற்ற சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான 03 மீண்டுவரும் செலவு விடயங்களின் நிதி ஏற்பாடான ரூபா 4,600,000 தொகையில் தேறிய சேமிப்பு பெறுமதி ரூபா 2,169,716 ஆகும். அதற்கிணங்க சேமிப்பானது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 34 சதவீதத்திற்கும் 60 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | 2023/01/27 ஆந் திகதிய 01/2023 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் 6 சதவீதமான மீண்டுவரும் நிதி எற்பாட்டினை நிறுத்திவைக்க வேண்டி ஏற்பட்டதன் அடிப்படையில் இச்செலவு விடயங்களின் கீழ் நிதி எற்பாடு நிறுத்திவைக்கப்பட்டதன் காரணமாக இவ்வாறு சேமிப்பு ஏற்பட்டுள்ளது என சுட்டிக்காட்டுகிறேன். | தேவைப்பாட்டின் பிரகாரம் நிதி ஏற்பாடு வேண்டப்படுதல் வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| | அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை | | |
| | | ரூபா | | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.5 ஆம் பிரிவு | 183,420 | மீளச் செலுத்தி முடிவுறுத்தப்படாத கடன் பணத்திலிருந்து அறவீடு செய்வதற்கு மிகுதியாக இருந்த பணத்தை உத்தியோகத்தர்களின் திரண்ட ஓய்வூதியத்திலிருந்து அல்லது பணிக்கொடைப் பணத்திலிருந்து அறவீடு செய்தல் வேண்டும். மேலும் 2017 திசெம்பர் 29 ஆந் திகதிய 262/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் மற்றும் அடுத்துவரும் ஆண்டுகளில் ஓய்வூதிய பணிக்கொடை | இராஜினாமாச் செய்த ஒரு பதவியின் சேவைக் காலத்தினை ஓய்வூதியத்திற்குச் சேர்த்துக்கொள்வதற்கு மேற்கொண்ட வேண்டுதல்களுக்கு இதுவரை ஓய்வூதியம் தயாரிக்கப்பட்டிருக்காததனால் அரசாங்கத்தினால் அறவிட வேண்டியவைகள் இதுவரை அறவிட முடியாதுள்ளது. இரண்டு நபர்களின் | தாபன விதிக் கோவையிலுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து ஒரு மீதி முற்பணங்கள் பீ கணக்கில் உள்ளடங்காமல் இருப்பதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்ததும் ஓய்வுபெற்ற 02 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவைக் கடன் மீதி ரூபா 183,420 ஆக இருந்ததுடன் அந்த மீதி இந்த அறிக்கைத் திகதி வரையும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதியானது 2024 மே மாதம் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. ஒரு நபர் மருத்துவ காரணங்களின் அடிப்படையில் ஓய்வுபெற்றிருந்தும் ஓய்வூதியத்தினைத் தயாரித்து வழங்கல் பத்திரம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | |
| (ஆ) | 2017 திசெம்பர் 29 ஆந் திகதிய 262/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 4 ஆம் பிரிவு | 211,600 | 2018 ஆம் ஆண்டு மற்றும் அடுத்து வரும் ஆண்டுகளில் மரண பணிக்கொடை வழங்கியுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய எந்த கடன் மீதியும் தமது நிறுவனங்களின் முற்பணங்கள் பீ கணக்கில் உள்ளடங்காமல் இருப்பதற்கு நிறுவன தலைவர் கவனித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி 03 மாதங்களுக்கும் 12 மாதங்களுக்குகிமிடையே மரணமடைந்த ஒரு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 211,600 கடன் மீதி இந்த அறிக்கைத் திகதி வரையும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | மரணமடைந்த ஒரு சாரதியிடமிருந்து விதவைகள் அனாதைகள் ஓய்வூதியத்தினை தயாரிப்பதற்காக ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் வழங்கல் பத்திரம் ஒப்படைக்கப்படாததனால் கடன் மீதியை தீர்த்துவைப்பதற்கு முடியாதுள்ளது. | சுற்றிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் | - | திணைக்களத்தினால் பிரசைகள்/ வாடிக்கையாளர் சாசனத்தினை தயாரித்து பொது மக்கள் பார்வையிடும் வகையில் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரசைகள் வாடிக்கையாளர் சாசனம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதனை காட்சிப்படுத்துவதற்காக பிராந்திய அலுவலகங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது பிராந்திய அலுவலகங்களில் அது காட்சிப்படுத்தப்பட்டுள்ளதுடன் | உரிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் பிரசைகள் சாசனத்தினை காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| இலக்க அரசாங்க நிருவாக மற்றும் முகாமைத் துவ அமைச்சு சுற்றறிக்கை | காட்சிப்படுத்தப்படாத அலுவலகங்களிலும் தாமதமின்றி அதனை மேற்கொள்ளுமாறு தெரியப்பட்டுத்தப்பட்டுள்ளது. | |

**2.3 குறித்த செயலுக்கான உபகட்டுநிதி வழங்குதலும் தீர்த்துவைத்தலும்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 01/2020 ஆம் இலக்க நிதி சுற்றறிக்கையின் 371(5) ஆம் இலக்க நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உபகட்டு நிதி செலுத்துகின்ற உத்தியோகத்தர்களால் தமது உபகட்டுநிதி தொடர்பான கணித்தல் எதிரீட்டினை சமர்ப்பிக்க வேண்டியதுடன் உரிய செயற்பாடுகளை முடிவுறுத்தி 10 நாட்களுக்குள் அந்த உப கட்டுநிதியை மீண்டும் தீர்த்துவைக்க வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டில் 16 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 442,795 மொத்த பெறுமதியான கட்டுநிதி நிர்ணயிக்கப்பட்ட திகதியில் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக நாடு முழுவதிலுமுள்ள 53 பிராந்திய அலுவலகங்களின் அனைத்து கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படுவது தலைமை அலுவலகத்தின் மூலமாகும். சில விசேட சந்தர்ப்பங்களுக்காக செலவு செய்ய வேண்டிய தேவை ஏற்படுகையில் முறைப்படியாக குறித்த செயலுக்கான உபகட்டுநிதியின் மூலம் அச்செலவினைத் தீர்த்துவைத்தலும் அதன் பின்னர் கட்டுநிதி தீர்த்துவைத்தலும் இடம் பெறுகின்றது. 10 நாட்களுக்குள் முற்பணங்களை தீர்த்துவைத்தல் நடைமுறையில் இடம்பெறுவது சிக்கலானதாக இருந்த போதிலும் உரிய செலவுகளை மேற்கொண்டதன் பின்னர் ஏதாவது தொகை மிகுதியாக இருக்குமாகவிருந்தால் அதனை தாமதமின்றி திணைக்கள வங்கி கணக்கிற்கு தெரியப்படுத்தி வவுச்சர்களை தாமதமின்றி சமர்ப்பித்து தீர்த்துவைத்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் மேலும் தெரிவிக்கிறேன். | உபகட்டுநிதியை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் தீர்த்து வைத்தல் வேண்டும். |

### 2.4 வைப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் இலக்கம் 571(2) மற்றும் (3) இன் பிரகாரம் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலங்கடந்த அனைத்து வைப்புக்களும் அரசாங்க வருமானத்திற்கு செலவுவைக்கப்பட வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 1,322,816 தொகை பொது வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததுடன் நிதிப்பிரமாண அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணி நிர்ணய ஆணையாளர் நாயகத்தின் உத்ததியோகபூர்வ இல்லத்துடனான காணியில் மண் நிரப்பி தரையை தயார்படுத்துவதற்காக இந்த வைப்பு பணம் தொடர்ந்தும் வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. அதற்காக இலங்கை காணிகளை அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனத்திற்கு வேண்டுதல்களை அனுப்பிவைத்து அவர்களின் தெரிந்துகொள்ளலின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தொடர்புபட்ட நிறுவனத்தின் சிபாரிசினைப் பெற்றுக்கொள்வதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதிப்பிரமாண அறிவுறுத்தல்களின் பிரகாரம் காலங்கடந்த வைப்புக்களை அரசாங்க வருமானத்திற்குச் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2007 ஆம் ஆண்டிலிருந்து காணி அமைச்சின் கீழ் காணி நிர்ணயத் திணைக்களத்தின் மூலம் அமுல்ப்படுத்தப்பட்ட பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஒட்டுமொத்த கிரயம் ரூபா 6,183.72 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தும் அந்த தொடக்க குறிக்கோளினை நிறைவேற்றுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை முடியாதிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (i) 1998 இன் 21 ஆம் இலக்க உரிமைகளை நிர்ணயித்தல் அதிகாரச்சட்டம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் பிம்சவிய நிகழ்சிசத்திட்டம் 03 மாவட்டங்களின் 03 பிரதேச செயலகப் பிரிவுகளில் | 1998 இன் 21 ஆம் இலக்க உரிமையை நிர்ணயிக்கும் அதிகாரச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஒரு கால அட்டவணை 2008 ஆம் | நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்ப்படுத்தக்கூடிய ஒரு கால அட்டவணையினுள் செயல் நடவடிக்கைத் |

ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்நிகழ்ச்சித்திட்டம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 20 மாவட்டங்களின் 87 பிரதேச செயலகப் பிரிவுகளில் மாத்திரம் அமுல்ப்படுத்தப்பட்டு காணப்பட்டிருந்தும் ஏனைய மாவட்டங்கள் உள்ளடங்கலாக இலங்கையை உட்படுத்தும் வகையில் இந்நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்ப்படுத்தக்கூடிய வகையில் ஒரு கால அட்டவணையைக் காட்டும் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

ஆண்டில் தயாரிக்கப்பட்டது. இத்திட்டம் பின்னர் காலரீதியாக திருத்தம் செய்யப்பட்டு மாற்றமடைந்துள்ளதுடன் இந்நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான திட்டம் தயாரிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் எதிர்பார்க்கப்பட்ட நிதி ஏற்பாடு தற்பொழுது வரையும் திணைக்களத்திற்கு கிடைத்திருக்கவில்லை. எனவே இலங்கையை உள்ளடக்கும் வகையில் உரிமையை நிர்ணயிக்கும் செயற்பாட்டினை நிறைவேற்ற முடியாதுள்ளது. அங்கீகரித்த பதவிநிலை மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் அதிக அளவில் வெற்றிடமாக காணப்படுவதனாலும் நில அளவையாளர் திணைக்களத்திற்குத் தேவையான நில அளவையாளர்களின் வெற்றிடங்களைப் பூரணப்படுத்துவதற்கு முடியாதுள்ளதன் காணரமாக நில அளவைப் பிரச்சினை தீர்த்துவைக்கப்படாமை, 13 புலனாய்வுகளுக்காக உத்தியோகத்தர்கள் போதியளவு எண்ணிக்கையில் காணப்படாமை, நில அளவை நடவடிக்கைகளுக்காக நில அளவையாளர்கள் இல்லாததன் மூலம் இன்னும் இந்த நடைமுறை தாமதமடைந்து காணப்பட்டது. எவ்வாறாயினும் 87 பிரதேச செயலகப் பிரிவுகளில் 2023-12-31 ஆந் திகதி வரை இந்நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டு வருகின்றது. அவ்வாறே தற்பொழுது இந்நடைமுறையை துரிதப்படுத்தும் வேலைத்திட்டமாக உத்தியோகத்தர்களை ஊக்குவிக்கும் நடைமுறையையும்

திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | | உள்ளடக்கி பத்து ஆண்டுகள் தந்திரோபாயத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | பிம்சவிய நிகழ்ச்சித்திட்டம் 2002 ஆம் ஆண்டின் போது ஹோமாகம தமுத்தேகம ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் ஆரம்பிக்கப்பட்டு 21 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்தும் 2023 ஆம் ஆண்டளவில் முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | புலனாய்வு செயற்பாடுகள், நீதிமன்றத்தில் காணப்படுகின்ற வழக்குகல் மற்றும் உரிய காணிச் செந்தக்காரர்கள் நாட்டைவிட்டு வெளியே செல்லுதல் போன்ற சந்தர்ப்பங்களில் உரிமையை முடிவுறுத்த முடியாதிருந்தது. தம்புத்தேகம, ஹோமாகம அலுவலகங்களில் இவ்வாறான கோவைகள் அதிக அளவில் ஒன்று சேர்ந்துள்ளன. அதிகாரச்சட்டத்தின் 55 ஆம் பிரிவின் கீழ் இறுதி விருப்பினைத் தெரிவிக்காது மரணமடைகின்ற சந்தர்ப்பங்களில் வாரிசுக்காரர்களுக்கு காணிகளை ஒப்படைத்தலின் கீழ் புலனாய்வு மேற்கொண்டு சான்றிதழ் அனுப்பிவைத்தலும் இந்த அலுவலகத்தின் மூலம் தற்பொழுது மேற்கொள்ளப்படுகின்றது. | எதிர்பார்த்த செயல்முன்னேற்றத்தினை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | இந்நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்திய 87 பிரதேச செயலகப் பிரிவுகளுக்குரிய மொத்த கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளின் எண்ணிக்கை 4,728 ஆகக் காணப்பட்டிருந்தும் அவற்றில் 1,449 பிரிவுகள் மாத்திரம் அதாவது 31 சதவீதம் மாத்திரம் நில அளவைகளை முடிவுறுத்தியிருந்தது. அவ்வாறே 26 பிரிவுகளின் 974 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் எந்த நில அளவை நடவடிக்கைகளையும் 2023 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை ஆரம்பித்திருக்கவில்லை. | காணிப் பகுதிகளுக்கான கெடஸ்தர் படம் தயாரிப்பது நில அளவையாளர் திணைக்களத்தினாலாகும். அத்திணைக்களம் பிம்சவிய தொடர்பான கெடஸ்தர் நில அளவை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. எவ்வாறாயினும் அத்திணைக்களத்தினால் ஒவ்வொரு பிரிவுக்குமான நில அளவை வேண்டுதல்களை தொடர்புபடுத்துவது அப்பிரிவுகள் தொடர்பாக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள நில அளவையாளர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டாகும். அவ்வாறே இந்த நில அளவைகள் சம்பந்தமான அளவுகளும் அந்த நில அளவைகளின் எண்ணிக்கையும் | |

| | | | |
|---|---|---|---|
| | | போதியளவில் இல்லாமையினை தீர்த்துவைக்க வேண்டியது நில அளவையாளர் திணைக்களத்தினாலாகும். | |
| (iv) | பிம்சவிய நிகழ்சித்திட்டம் அம்பாறை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் எந்த மாவட்டத்திலும் பூரணமாக இந்த நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்காமையின் காரணமாக இதன் மூலம் எதிர்பார்த்த குறிக்கோளை நிறைவேற்றுவதில் தடைகள் காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. | 1931 இன் 20 ஆம் இலக்க காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்படாத அதிக அளவிலான நிலத்தினை கொண்ட கிராமங்கள் காணப்படுவதன் காரணமாக இம்மாவட்டங்களில் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிக்க முடியாதுள்ளது. காணிகளை அளவீடு செய்வதற்காக போதியளவு எண்ணிக்கையான நில அளவையாளர்கள் இணைத்துக்கொள்ளும் இயலுமை இல்லாமை நாடு முழுவதும் 16 மில்லியன் காணித்துண்டுகள் காணப்படுகின்றது என கணிக்கப்பட்டுள்ளது. அக்காணித்துண்டுகளை அளவீடு செய்வதற்காக நில அளவையாளர் திணைக்களத்தின் மூலம் 128 உத்தியோகத்தர்களும் உத்தரவுபெற்ற 72 நில அளவையாளர்களும் மாத்திரம் ஒரு தடவையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள் ளனர் என அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க அனைத்து நில அளவையாளர்களும் நில அளவை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தும் ஒரு ஆண்டிற்கு இத்திணைக்களத்திற்கு கிடைக்கின்ற எல்லை படங்களில் உள்ளடங்கியுள்ளதானது 50,000 இற்கும் 60,000 இற்கும் இடைப்பட்ட அளவு மாத்திரமாகும். எனவே உரிமையை நிர்ணயிக்கும் நடைமுறையை வினைத்திறனாக்குவதற்காக படங்களின் அளவில் பற்றாக்குறை காணப்பட்டது. | எதிர்பார்த்த செயல்முன்னேற்றத்தினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அவ்வாறே இத்திணைக்களம் தொடர்பாக இலங்கை நிருவாக சேவையின் பிரதி/ உதவி ஆஈணையாளர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையைச் சேர்ந்த புலனாய்வு உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ளுமாறு விடுவிக்கப்பட்ட வேண்டுகோள்களுக்காக முறையான பதில் கிடைக்காததன் அடிப்படையில் மிகுதியான மாவட்டங்களுக்காக உரிமைகளை நிர்ணயிக்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் சிக்கல் நிலைமை உருவாகியுள்ளது. | |
| (v) | 1998 இன் 21 ஆம் இலக்க உரிமைகளை பதிவுசெய்யும் அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட முழுக் காணித்துண்டுகளின் எண்ணிக்கையான 1,671,417 இல் 58 சதவீதம் அல்லது 972,592 காணித்துண்டுகளின் உரிமைகளை நிர்ணயிக்கும் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் 42 சதவீதத்தினை இன்னும் அங்கீகரித்துக்கொள்வதற்கு முடியாதுள்ளது என அவதானிக்கப்பட்டது. | 1998 இன் 21 ஆம் இலக்க உரிமைகளை நிர்ணயிக்கும் அதிகாரச்சட்டத்திற்கு இணங்க காணிப்பகுதிகளுக்காக கெடஸ்தர் படங்களைத் தயாரிப்பது நில அளவையாளர் திணைக்களத்தினாலாகும். அத்திணைக்களத்திற்கு பிரதேச செயலாளர், காணி ஆணையாளர் நாயகத்திடமிருந்து கிடைக்கின்ற வேண்டுதல்களுக்கு மேலதிகமாக நில அளவை நடவடிக்கைகளை மேற்கொண்டும் இத்திணைக்களம் பிம்சவிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான கெடஸ்தர் நில அளவை நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றது. எவ்வாறாயினும் இத்திணைக்களத்தினால் ஒவ்வொரு பிரிவிற்குமான நில அளவை வேண்டுதல்களை தொடர்புபடுத்துவது அப்பிரிவு தொடர்பாக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள நில அளவையாளர்களை அடிப்படையாகக் கொண்டேயாகும். அவ்வாறே இந்த நில அளவை | அங்கீகரிக்கப்படாத காணித்துண்டுகளை அங்கீகரிக்கச் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சம்பந்தமான அளவுகள் மற்றும் அந்த நில அளவைகளின் எண்ணிக்கைகளும் போதியதாக இல்லாமையினையும் தீர்த்துவைக்க வேண்டியது நில அளவை திணைக்களத்தினாலாகும். | |
| (vi) | பல்வேறு சிக்கல்களின் காரணமாக உரிமைச் சான்றிதழ்களை வழங்குவதற்காக மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு முடியாது 85 பிராந்திய அலுவலகங்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிற்படுத்திவைத்திருந்த கோவைகளின் எண்ணிக்கை 490,327 ஆக இருந்ததுடன் இந்த அளவானது நில அளவை செய்து வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள மொத்த காணித்துண்டுகளின் அளவான 1,671,417 இல் 29 சதவீதமாகும். திணைக்களத்தினால் பிற்படுத்திவைத்துள்ள கோவைகள் சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் மற்றும் அவற்றினை கண்காணிப்புச் செய்தல் முறைப்படியாக மேற்கொள்ளப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தினுள் தொடரச்சியாக பிற்படுத்திவைக்கின்ற கோவைகளை மீண்டும் தீர்த்துவைத்து சான்றிதழ் வழங்குதல் இடம்பெறுகின்றது. இது செயற்திறனாக இடம்பெறுவதுடன் எப்போதும் 05 இலட்சம் அளவானவை பிற்படுத்தி வைக்கின்ற கோவைகளாக அவதானிக்கப்படுகின்றன. எவ்வாறாயினும் இக்கோவைகளை கண்காணிப்புச் செய்யும் நடவடிக்கைகளாக தீர்த்துவைத்தல் அல்லது வெளிநாடு சென்ற நபர்களை புலனாய்வுச் செயற்பாட்டிற்கு தொடர்புபடுத்துவதன் அடிப்படையில் நிர்ணயித்தல் நடைமுறைக்கு மீண்டும் தொடர்புபடுத்தி சான்றிதழ் வழங்கப்படுகின்றது. இச் செயற்பாட்டினை தொடர்ச்சியான ஆய்விற்கு உட்படுத்தி இத்திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருவதுடன் கடந்த ஆண்டிற்குள் மாத்திரம் பிற்படுத்தப்பட்ட கோவைகளின் மூலம் தீர்மானம் வழங்குதல் 2022 ஆம் ஆண்டின் போது 9,376 ஆகவும் 2023 ஆம் ஆண்டின் போது 8,465 ஆகவும் நிறைவேற்றக்கூடியதாக இருந்தது. அதற்கிணங்க பயிற்சி சந்தர்ப்பம், ஒன்றுதிரண்ட பரீட்சிப்பு, தொடர்ச்சியான பின்தொடர் நடவடிக்கை என்பவற்றின் மூலம் படிப்படியாக | பிற்படுத்திவைக்கப் பட்ட கோவைகள் சம்பந்தமான பின்தொடர் நடவடிக்கை மற்றும் கண்ணகாணிப்பு நடவடிக்கைகளை முறைப்படியாக மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பிற்படுத்தப்பட்ட கோவைகளின் அளவு குறைக்கப்பட்டு வருகின்றது. | |
| (vii) | பிம்சவிய நடவடிக்கைகளுக்காக திணைக்களம் நாடுமுழுவதும் 52 பிராந்திய அலுவலகங்களை செயற்படுத்திவருவதுடன் அவை தனியார் மற்றும் அரசு சார்ந்த தனியார் நிறுவனங்களில் பேணப்பட்டு வந்திருந்தது. 2019 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை அந்த அலுவலகங்களின் கட்டிட வாடகை மற்றும் பாதுகாப்பு செலவுகளாக ரூபா 246,884,260 தொகை செலுத்தப்பட்டிருந்தும் 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக மீளாய்வாண்டிற்காக செலவு செய்யப்பட்டுள்ள கட்டிட வாடகை மற்றும் பாதுகாப்பு சேவை செலவுகள் ரூபா 48,390,246 ஆக இருந்தது. | தற்பொழுது ஸ்தாபிக்கப்பட்டுள்ள 53 அலுவலகங்களுக்கு மத்தியில் தனியார் கட்டிடங்களில் உள்ள அலுவலகங்களின் எண்ணிக்கை 27 மற்றும் அரசு சார்ந்த தனியார் கட்டிடங்களிலுள்ள 04 அலுவலகங்களுக்கு வாடகை செலுத்தப்படுகின்றது. அரசாங்க கட்டிடங்களிலுள்ள அலுவலக்களின் எண்ணிக்கை 22 இல் 04 அலுவலகங்களுக்காக வாடகை செலுத்தப்படுகின்றன. பிரதேச செயலகங்கள், அரசாங்க அல்லது அரசாங்கத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட நிறுவனங்களுக்கு இடமாற்றம் செய்து மேற்கொள்ளப்படுகின்ற செலவுகளைக் குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. 2023 சனவரி மாதம் 42 பிராந்திய அலுவலகங்களுக்கு பாதுகாப்பு செலவுகள் செலுத்தப்பட்டதுடன் தற்பொழுது அந்த பாதுகாப்பு சேவையை வழங்குகின்ற நிறுவனங்களின் ஏ்ணிக்கை 34 வரை குறைக்கப்பட்டு பாதுகாப்பு சேவைக்காக மேற்கொள்ளப்படுகின்ற செலவுகள் குறைக்கப்பட்டுள்ளன. | 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் செலவுகளை இயலுமான அளவு குறைத்தல் வேண்டும். |
| (viii) | 1998 ஆம் ஆண்டிலிருந்து 2023 திசெம்பர் 31 வரை காணிப் பதிவாளருக்கு உரிமையுடன் பதிவு செய்வதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ள காணித்தண்டுகளின் எண்ணிக்கை 779,691 ஆக இருந்ததுடன் அச்செயற்பாட்டினை முடிவுறுத்தி கிடைத்துள்ள உரிமைச் சான்றிதழ்களின் எண்ணிக்கை 422,070 ஆக இருந்த போதிலும் | அதிகாரச் சட்டத்திற்கு இணங்க காணியின் ஒவ்வொரு நில அலகும் அளவீடு செய்யப்படுகின்றது. அதாவது தனியார் காணிகள் மற்றும் அரசாங்கத்தின் காணிகள் (காணியின் பௌதீக நிலக் காட்சி - ஆறுகள், கால்வாய்கள், நிர்ணயிக்கப்பட்ட நில அலகுகள் - | கிடைக்காத சான்றிதழ்கள் சம்பந்தமாக அறிக்கையை பேணி உரிய காலத்தில் பின் தொடர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 357,621 உரிமைச் சான்றிதழ்களின் செயற்பாடுகள் முடிவுறுத்தப்பட்டு கிடைத்திருக்கவில்லை. அச்சான்றிதழ்கள் சம்பந்தமான அறிக்கைகள் காணப்படுதல் அல்லது பின்தொடர் நடவடிக்கை எடுத்தலினை திணைக்களம் மேற்கொண்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | பெருந்தெருக்கள், வீதிகள்) தனித்தனியாக நில அளவை செய்து தனியார் காணிகளுக்கு உரிமைச் சான்றிதழ் வழங்கப்படுவதுடன் அரசாங்க காணிகளுக்காக உரிமைச் சான்றிதழ் வழங்கப்படுவதில்லை. அதற்கிணங்க பதிவுசெய்வதற்காக 779,691 காணித்துண்டுகள் காணிப்பதிவாளருக்கு அனுப்பி உரிமைச் சான்றிதழ் உரிய உரிமையாளருக்கு அனுப்பிவைக்கப்படுகின்றது. அரசாங்க காணிகளுக்காக இடம்பெறுவதாவது உரிமைகளை பட்டோலைப்படுத்துவது மாத்திரமாகும். அவ்வாறே பட்டோலைகளை பதிவுசெய்வது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுத்து ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போதும் இடம்பெறுகின்றது. அதற்கிணங்க இப்புள்ளிவிபரம் சம்பந்தமாக முறையான பின்தொடர் நடவடிக்கையானது தொடர்ச்சியாக இடம்பெறுவதுடன் உரிமைகளை நிர்ணயிக்கும் அதிகாரச்சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் காட்டப்பட்டுள்ளதானது அரசாங்க காணிகளுக்காக பட்டோலைகளை வழங்குவதாகும். | |
| (ix) | 1998 இன் 21 ஆம் இலக்க உரிமைகளை பதிவுசெய்தல் அதிகாரச் சட்டத்தின் 7(1) ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு உறுதியாக குறிப்பிடப்பட்ட ஏதாவது ஒரு பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குமாக உரிமைகளை நிர்ணயிக்கும் ஆணையாளரினால் ஒரு ஒற்றுமை சபை நியமிக்கப்பட வேண்டிய போதிலும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பிம்சவிய நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்பபடுத:துகின்ற 87 | ஒற்றுமை சபையை நியமிப்பதன் மூலம் புலனாய்வுச் செயற்பாடு இலகுபடுத்தப்படுவதுடன் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற புலனாய்வுத் தரவுகளைப் பெற்றுக்கொள்ளலானது ஒற்றுமை சபை அங்கத்தவர்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. ஒற்றுமை சபைக்காக உத்தியோகத்தர்களைப் பெயரிட்டு அனுப்பிவைத்தலானது கிராம | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரு சமகி சபையை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாவட்டங்களின் 4,728 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 532 பிரிவுகளில் மாத்திரம் ஒற்றுமை சபை நியமிக்கப்பட்டுள்ளதுடன் மிகுதியான 4,196 பிரிவுகளில் சமகி சபையை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையானது ஒட்டு மொத்த செயல்முன்னேற்றம் குறைவடைவதற்கு காரணமாக உள்ளது என அவதானிக்கப்பட்டது. | உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலகங்களின் மூலமாகும். ஒவ்வொரு பிரிவின் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலகங்களின் மூலமாகும். ஒவ்வொரு பிரிவிலுள்ள கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலகங்களினூடாக ஒற்றுமை சபை அங்கத்தவர்களை பெயரிட்டு அனுப்புமாறு 04/06/59 ஆம் இலக்க 2023-06-08 ஆந் திகதிய கடித்தின் மூலம் எங்களின் பிராந்திய அலுவலகங்களின் பிரதி ஆணையாளர்கள்/ உதவி ஆணையாளர்கள் தற்பொழுது தெரியப்படுத்தப்பட்டுள்ளார்கள். ஒற்றுமை சபை நியமிக்கப்படுவதாவது ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குமாக கெடஸ்தர் படம் கிடைத்ததன் பின்னரானதுடன் திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படுகின்ற பிரதேச செயலகப் பிரிவிற்குரிய அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கும் அல்ல. மேலும் பெயரிடப்படுகின்ற பிரிவுகளுக்காக 03 ஆண்டுகள் காலத்திற்கு செல்லுபடியாகும் வகையில் ஒற்றுமை சபை அங்கத்தவர்கள் நியமிக்கப்படுவார்கள். | |

**3.1.2 எதிர்பார்த்த மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டின் போது காணி உரிமைகளை நிர்ணயித்தல் அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழான தீர்மானங்களுக்கு மத்தியில் வர்த்தமானியின் மூலம் | அந்த இலக்கினை அடைந்து கொள்வதற்காக நில அளவையாளர் திணைக்களத்தினால் நில அளவை செய்து வழங்குவதற்கு நிர்ணயிக்கப்பட்ட 70,350 காணித்துண்டுகளின் இலக்கானது ஆண்டின் மத்திய பகுதி அளவில் 66,750 காணித்துண்டுகளாக திருத்தம் | திட்டமிடப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு முறைப்படியாக திட்டங்களைத் தயாரித்து |

| | | | |
|---|---|---|---|
| | பகிரங்கப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட காணித்துண்டுகளின் அளவு 200,000 ஆக இருந்த போதிலும் உண்மையாக வர்த்தமானியின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்ட காணிகளின் அளவு 56,789 ஆகும். அது சதவீதமாக 28.3 சதவீதமாகும். | செய்யப்பட்டதுடன் எங்களுக்கு நில அளவை செய்து வழங்கப்பட்ட காணித்துண்டுகளின் அளவு 59,181 ஆகும். 2023 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அந்த இலக்குகளில் 61,222 காணித்துண்டுகளின் செயல்முன்னேற்றம் அடைந்துகொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் சதவீதம் 61.22 சதவீதமாகும். நில அளவையாளர் திணைக்களத்தினால் நில அளவை செய்து வழங்கிய இலக்குகளில் 14 ஆம் பிரிவின் கீழ் தீர்மானத்தை சிபாரிசு செய்தல் மேற்கொள்ளக்கூடிய அளவு 60 சதவீத்தினை மிகைக்கக்கூடியதாக இருத்தல் திணைக்கள மட்டத்தில் திருப்தி கொள்ளக்கூடிய விடயமாகும். அதற்கிணங்க குறிப்பிடத்தக்கதாக அதிக அளவில் நில அளவை செய்து ஆண்டின் தொடக்கத்தில் அல்லது மத்தியில் எங்களுக்கு வழங்கப்பட்டிருக்குமாகவிருந்தால் இந்த இலக்கினை இன்னும் அதிகரிக்கச் செய்யும் இயலுமை காணப்பட்டது. | அமுல்ப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | காணிகளின் உரிமையைப் பதிவுசெய்வதற்காக உரிமைச் சான்றிதழ்களை வழங்குவதற்கு 200,000 காணித்துண்டுகள் எதிர்பார்க்கப்பட்டிருந்தும் காணிகளின் உரிமைகளைப் பதிவுசெய்வதற்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்தது 47,271 காணித்துண்டுகளாகும். அதனை சதவீதமாக எடுத்துக்கொள்கையில் 23.6 சதவீதம் அளவிலானதாகும். | அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் உரிமைச் சான்றிதழ் பத்திரத்தினை வழங்குவதற்காக காணிப் பதிவாளருக்கு பட்டோலைகளை அனுப்புதல் 2023 செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திருத்திய இலக்கானது 70,000 காணித்துண்டுகளாக இருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அந்த இலக்குகளில் 47,271 காணித்துண்டுகளின் செயல்முன்டேனற்றம் அடைந்துகொள்ளப்பட்டிருந்ததுடன் அது 67.53 சதவீதமாகும். இவற்றில் அரசாங்க காணிப் பகுதிகளுக்காக உரிமைப் பதிவேட்டில் பதிவுசெய்யும் நடைமுறை மாத்திரம் இடம்பெறுவதுடன் உரிமைச் சான்றிதழினை வழங்குதல் இடம்பெறுவது தனியார் காணிகளுக்காக மாத்திரமாகும். எவ்வாறாயினும் உரிமைகளைப் பதிவுசெய்யும் நடைமுறையானது இத்திணைக்களம் மாத்திரம் தனியாக நிறைவேற்றும் ஒரு செயற்பாடு அல்லாததுடன் பல திணைக்களங்களின் செயற்பாடுகள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. | திட்டமிட்டவாறு உரிமைகளைப் பதிவு செய்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 1931 இன் 20 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்திற்கு இணங்க காணிகளை நிர்ணயிக்கும் கட்டளையானது காணி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பிவைக்கும் செயற்பாடானது 40 சதவீத மட்டத்தில் காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டிற்கான திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் காணிகளை நிர்ணயிக்கும் நடைமுறையின் போது 03 மாகாணங்களின் காணிகளை நிர்ணயிக்கும் 05 அறிவித்தல்களின் நிலப் பிரதேசத்தினை நிர்ணயிக்கும் கட்டளையைத் தயாரித்து கௌரவ விடயத்திற்கப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இவற்றில் சேருவிலப் பகுதி என்ற கிராமங்களுக்குரிய நிர்ணயிக்கும் கட்டளைகளைத் தயாரித்து அனுப்பிவைப்பதற்கு 2023 ஆம் ஆண்டில் இயலுமை கிடைத்துள்ளதுடன் ஏனைய கிராமங்களின் நிர்ணயிக்கும் கட்டளைகள் கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பிவைப்பதற்கான இயலுமை கிடைக்கவில்லை. இதற்கான பிரதான காணரமாக குறிப்பிடக்கூடியது மேற்கூறிய படங்களக்குரிய நில அளவைகளின் விபரம் மற்றும் "S" நிரல் வரை படங்கள் இதுவரை உரிய பிராந்திய நில அளவை அலுவலகங்களிடமிருந்து இத்திணைக்களத்திற்கு கிடைத்திருக்காமையாகும். இதற்காக பல சந்தர்ப்பங்களில் வேண்டுதல்கள், ஞாபகப்படுத்தல்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் இன்னும் நிரல் வரைபடங்கள் கிடைப்பது தாமதமடைந்துள்ளது என அவதானிக்கப்பட்டது. அவ்வாறு நிரல் வரைபடங்கள் கிடைக்காமையின் பின்னணியில் காணிகளை நிர்ணயிக்கும் நடைமுறையின் மிகுதியான எந்த நடவடிக்கையையும் மேற்கூறிய மூன்று கிராமங்கள் தொடர்பாக மேற்கொள்ள முடியாதுள்ளது. | எதிர்பார்த்த இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் கீழ் பதிவுசெய்துள்ள 65-0748 ஆம் இலக்க லேன்ட்ரோவர் டிபென்டர் வாகனம் 2007 ஆம் ஆண்டிலிருந்து இத்திணைக்களத்தின் கீழ் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தும் உரிய உரிமையை ஒப்படைத்தல் | 65-0748 ஆம் இலக்க லேன்ட் ரோவர் டிபென்டர் வாகனத்தை இத்திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்குரிய ஆவணங்கள் ஐக்கிய நாடுகளின் உலக உணவுகள் மற்றும் விவசாய அமைப்பிற்கு ஒப்படைக்கப்பட்டுளதுடன் திர்வை இன்றி இறக்குமதி செய்யும் | துரிதமாக உரிமையை பொறுப்பேற்றல் வேண்டும். |

இடம்பெற்றிருக்கவில்லை.

நடவடிக்கைகளுக்காக இலங்கை சுங்கத்துடன் தொடர்புபட்ட நடவடிக்கைகள் தற்பொழுது இடம்பெறுகின்றது என எனக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 4. மனிதவளங்கள் முகாமைத்துவம்

### 4.1 இணைத்துக்கொள்ளப்பட்ட ஆளணியினர் மற்றும் உள்ளபடியான ஆளணியினர்

**கணக்காய்வு அவதானிப்புக்கள்**

காணி நிர்ணயத் திணைக்களத்தின் அங்கீகரித்த மற்றும் உள்ளபடியான ஆளணியினர் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவி | அங்கிகரித்த ஊழியிர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | மிகை/ வெற்றிடமான ஊழியர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சீரேஷ்ட | 105 | 34 | 71 |
| மூன்றாம் | 07 | 05 | 02 |
| இரண்டாம் | 1746 | 838 | 908 |
| ஆரம்பம் | 254 | 149 | 105 |
| | ........ | ........ | ........ |
| மொத்தம் | 2,112 | 1,026 | 1,086 |
| | ........ | ........ | ........ |

திணைக்களத்தின் சிரேஷ்ட மட்டத்திலுள்ள 71 வெற்றிடங்களும், மூன்றாம் மட்டத்திலுள்ள 02 வெற்றிடங்களும் இரண்டாம் மட்டத்திலுள்ள 908 வெற்றிடங்களும் மற்றும் ஆரம்ப மட்டத்திலுள்ள 105 வெற்றிடங்களுமாக திணைக்களத்தின் வெற்றிடமான ஊழியர் எண்ணிக்கை 1,086 ஆக இருந்ததுடன் அது அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையில் 51 சதவீதமாகும். அந்த வெற்றிடங்கள் 2024 ஏப்ரல் மாதம் வரையும் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்**

அரசாங்கத்தின் புதிய ஆட்சேர்ப்பானது மட்டுப்பாடுகளுடன் மேற்கொள்ளப்படுவதுடன் சிரேஷ்ட மட்டத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்புமாறு அரசாங்க நிருவாக உள்நாட்டு அலுவலல்கள், மாகாண சபைகள் மற்றும் ஊள்ளுராட்சி அமைச்சிற்கு வேண்டுதல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
வெற்றிடங்கள் நிரப்பப்படும் வரை பதில் கடமைபார்த்தல்/ கடமைகளை நிறைவேற்றுவதற்காக 14 பிரதி/உதவி ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
திணைக்களத்தில் நிரந்தர நியமங்களைப் பெற்ற 14 பிரதி/ உதவி ஆணையாளர்கள் பதில் கடமை/ கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர். மூன்றாம் மட்டத்தின் இரண்டாம் மட்டத்தின் மற்றும் ஆரம்ப மட்டத்தின் வெற்றிடங்களுக்காக புதிய ஆட்சேரப்புக்களின் போது அல்லது உத்தியோகத்தர்களை வழங்குமாறு அரசாங்க நிருவாக, உள்நாட்டு அலுவலல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி அமைச்சிற்கு வேண்டுதல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**சிபாரிசுகள்**

வெற்றிடங்களை மீளாய்வு செய்து ஆட்சேர்ப்புக்கள் செய்தல் வேண்டும்.